# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),
தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் - 03.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 10804/F/2023**

திரு. S.பால விநாயகர் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வாணியம்பாடி-635 751 .. பொது அதிகார அமைப்பு
திருப்பத்தூர் மாவட்டம்

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 21.01.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 06.03.2023 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 15.06.2023 |

*******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட இவ்வழக்கு இன்று (03.04.2025) இவ்வாணையத்தால் நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. S.பால விநாயகர் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு மா.சிவக்குமார் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வாணியம்பாடி திருப்பத்தூர் மாவட்டம் நேரில் ஆஜரானார்கள்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கடந்த 01.01.1969 முதல் 01.12.1970 ஆம் ஆண்டு வருடத்தில் நமூனா பட்டா சர்வே எண் 74 மற்றும் கொத்தகோட்டை கிராமம் நத்தம், சிட்டா, அடங்கல் மற்றும் FMB நமூனா பட்டா எத்தனை நபர்களுக்கு வழங்கப்பட்ட அந்தப்பக்கங்கள் குறித்து உரிய சான்றளிக்கப்பட்ட நகல் என்பது போன்ற முழு விவரங்களை 16 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்த பின்னரும் தனக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் நாளதுவரை மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்படாததால், மனுதாராரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (03.04.2025) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ஏற்கெனவே தஅஉசமே.வ.எண்.20/2023 நாள் 20.03.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கியதாக இவ்வாணையத்தில் தெரிவித்தார்..

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் தனது மனுவில் கோரியுள்ள தகவல்கள் குறித்து நாளது வரையில் முழுமையான தகவல்கள் வழங்காத அலுவலர்கள் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என இவ்வாணையத்தில் கோரினார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது. எனவே இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- *மனுதாரருக்கு உரிய காலகெடுவிற்குள் முழுமையான தகவல் வழங்காத காரணத்தினால் திரு. க.கௌரி சங்கர் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர் வாணியம்பாடி திருப்பத்தூர் மாவட்டம் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தையும் மற்றும் தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, சட்டப்பிரிவு 20(2)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்து பூர்வமான விளக்கத்தையும் இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு வார காலத்திற்குள் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்களிடமிருந்து பெற்று ஆணையத்திற்கு நேரில் வந்து சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத்தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடப்படுகிறது.*

*மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரிய அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினை இவ்வாணையத்திற்கு நேரில் வந்து சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/(மா.செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 10804/F/2023</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வாணியம்பாடி-635 751
திருப்பத்தூர் மாவட்டம்

**<u>மனுதாரர் SA 10804/F/2023</u>**

திரு. S.பால விநாயகர்
த/பெ செல்வராஜ்,
கொத்தக்கோட்டை அஞ்சல்,
வாணியம்பாடி வட்டம்
திருப்பத்தூர் மாவட்டம்-635 752

Copy to: File
VPS /PA /15.04.2025